முற்பகல் 11-50

எனது வேடசந்தூர் தொகுதி, எரியோடு அருகில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் சுமார் 5 ஏக்கர் நிலப்பரப்பில் பல இலட்சம் ரூபாய் செலவில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில் வெங்காய இருப்பு குடோன் கட்டப்பட்டது. அது இப்போது பயனற்ற நிலையில் செயல்படாமல் உள்ளது. பொது மக்கள் பயன்படுத்தும் வகையில் அல்லது ஏதாவது ஓர் அரசு அலுவலகத்திற்குப் பயன்படுத்துகிற வகையில் அந்தக் கட்டடத்தை மாற்றியமைக்க வேண்டுமாய் அம்மா அவர்களைப் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். நான் நித்தம் வணங்கும் எனது அன்னை மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி மீண்டும் ஒருமுறை வணங்கி, என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்கி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

8. விதி 110–ன்கீழ் அறிக்கை

தொழில் வளர்ச்சிக்கான முதலீட்டில் தமிழ்நாடு முதலிடம்– இந்தியப் பொருளாதாரத்தைக் கண்காணிக்கும் மையத்தின், (C.M.I,E.) ஆய்வு அறிக்கை குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு மாநிலங்களுக்கிடையே தற்போது நிலவி வரும் போட்டி சூழ்நிலையை உணர்ந்து, இந்தியாவிலேயே தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முதலிடம் எய்துவதற்கு ஏதுவாக தொழில் நேயமிக்க சூழ்நிலையை உருவாக்கவும், தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதனை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அறிவார்கள்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2003 ஏப்ரல் 25

இந்திய பொருளாதாரத்தைக் கண்காணிக்கும் மையமான Centre for Monitoring Indian Economy, (C.M.I.E.) என்ற நிறுவனம், பல்வேறு மாநிலங்களில் எந்த அளவிற்கு உற்பத்தித் துறையில் அதாவது Manufacturing Sector-ல் முதலீடு செய்யப்பட்டுள்ளது என்பது தொடர்பான ஓர் ஆய்வறிக்கையை சமீபத்தில் வெளியிட்டுள்ளது. அந்த ஆய்வறிக்கையின்படி 2003 ஆம் ஆண்டு ஜனவரி மாத நிலவரப்படி, பல்வேறு மாநிலங்களில் உற்பத்தித் துறையில் முதலீடு செய்யப்பட்டுள்ளதில் தமிழ்நாடுதான் முதலிடம் வகிக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்று C.M.I.E. வெளியிட்டுள்ள செய்தியை இந்தப் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

2003 ஆம் ஆண்டு ஜனவரி மாத நிலவரப்படி, தமிழ்நாட்டில் உற்பத்தித் துறையில் செய்யப்பட்டுள்ள முதலீடு 43,492 கோடி ரூபாய் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2001 ஆம் ஆண்டு ஏபரல் மாத நிலவரப்படி, தமிழ்நாட்டில் உற்பத்தித் துறையில் முதலீடு 37,306 கோடி ரூபாயாகும். 2003 ஆம் ஆண்டு ஜனவரி மாத நிலவரப்படி, உற்பத்தித் துறையில் இருந்த முதலீடு 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத நிலவரப்படி இருந்த முதலீட்டை விட 16.58 விழுக்காடுகள் அதிகமாகும்.

2001 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து 2003 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குட்பட்ட காலத்தில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழ்நாட்டில்தான் உற்பத்தித் துறையில் முதலீடு வளர்ச்சி விகிதம், அதாவது growth rate அதிகமாக உள்ளது. 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2003 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குட்பட்ட காலகட்டத்தில் பல மாநிலங்களின் உற்பத்தித் துறையில் முதலீட்டு வளர்ச்சி விகிதம், growth rate பின்னோக்கியே சென்றுள்ளது. அதாவது nagative trend-லேயே சென்றுள்ளது என இந்த ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், அண்டை மாநிலங்களான கர்நாடகா 6-வது இடத்திலும், ஆந்திரப்பிரதேசம் 7-வது இடத்திலும், கேரளா 9-வது இடத்திலும் இருக்கின்றன என்று C.M.I.E. அறிக்கை கூறுகிறது.

அனைத்துத் துறைகளிலும் முதல் மாநிலமாக தமிழ்நாட்டைக் கொண்டு வருவேன் என்று ஏற்கெனவே இந்த அவையில் உறுதி அளித்திருந்தேன். அதனை உறுதி செய்யும் வகையில் இந்தியப் பொருளாதாரத்தைக் கண்காணிக்கும் மையமான Centre for Monitoring Indian Economy-C.M.I.E. வெளியிட்டுள்ள அறிக்கையில் உற்பத்தித்

2003 ஏப்ரல் 25] [செல்வி ஜெ ஜெயலலிதா]

துறையில் செய்யப்பட்டுள்ள முதலீட்டில் தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக விளங்குகிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்று ஆய்வறிக்கை வெளியிட்டுள்ளதிலிருந்து, நம்முடைய சாதனை தெளிவாகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியினைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

7. மானியக் கோரிக்கைகள், 2003–2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண் 43–சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை—தொடர்ச்சி

முற்பகல் 11-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி காசாம்பு பூமாலை.

திருமதி காசாம்பு பூமாலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணினம் போற்றும் பெருந்தகை, எனது இனிய தெய்வம் புனிதப் போராளி டாக்டர் ஐயா அவர்களின் ஆசியினாலும், டாக்டர் சின்ன அய்யா அவர்களின் வாழ்த்துகளினாலும் கட்சியின் மாநிலத் தலைவர் திரு. ஜி.கே. மணி அவர்களின் போராதரவினாலும், இப்பேரவையில் உரையாற்ற வாய்ப்புக் கிடைத்தமைக்கு எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உன்னத மனித வளத்தை உருவாக்கும் மாபெரும் பொறுப்பு பெண்களையே சாரும் என மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் தனது கொள்கை விளக்கக் குறிப்பின் முன்னுரையில் கூறியுள்ளமைக்குப் பெருமைப்படுகிறேன், நன்றி கூறுகிறேன். நான் சார்ந்துள்ள பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனத் தலைவர் டாக்டர் அய்யா அவர்களும் பெண் இனத்தைப் போற்றுபவர். ஒவ்வொரு நபரும், தன் பெயரில் முதலெழுத்தாக, தன் தாய்ப் பெயரை முதலெழுத்தாகப் போட வேண்டுமென்ற உன்னத கருத்தை இந்த உலகிற்குத் தந்தவர். ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே என்பார்கள். ஆக்கம் என்பது வரவேற்கலாம்; பெண்களால் அழிவு என்ற அவப்பெயர்...

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் காசாம்பு பூமாலை அவர்கள், எடுத்த எடுப்பிலேயே எங்களுடைய அம்மா அவர்கள் தலைமையில்